Australian Government
Department of Health

Australian Government
Aged Care Quality and Safety Commission

# முதியோர் பராமரிப்பு உரிமைகள் அதிகாரப்பத்திரம் (Charter)

நான் பின்வருவனவற்றிற்கு  உரிமை கொண்டுள்ளேன்:

1. பாதுகாப்பான அத்துடன் உயர்தரமான பராமரிப்பு மற்றும் சேவைகளுக்கு;
2. கண்ணியமாகவும், மரியாதையாகவும் நடாத்தப்படுவதற்கு;
3. எனது அடையாளம், கலாசாரம் மற்றும் வேறுபாடு போன்றவை மதிக்கப்படுவதற்கும், ஆதரவளிக்கப்படுவதற்கும்;
4. துஸ்பிரயோகம் மற்றும் புறக்கணிப்பு இன்றி வாழ்வதற்கு;
5. நான் புரிந்துகொள்ளும் வகையில் எனது பராமரிப்பு மற்றும் சேவைகள் பற்றித் தெரிந்துகொள்வதற்கு;
6. எனது உரிமைகள், பராமரிப்பு மற்றும் சேவைகள் பற்றிய தகவல்கள் அடங்கலாக,என்னைப்பற்றிய தகவல்கள் அனைத்தையும் அணுகுவதற்கு;
7. தனிப்பட்ட ஆபத்துக்கு ஆளாக்கும்  தெரிவுகள் அடங்கலாக எனது பராமரிப்பு, தனிப்பட்ட மற்றும் சமூக வாழ்வு பற்றிக்  கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கவும் மற்றும் தெரிவுகளை மேற்கொள்வதற்கும்;
8. எனது தினசரி வாழ்வு குறித்த சொந்த விடயங்கள், நிதி அலுவல்கள் மற்றும் உடைமைகள் பற்றி அவற்றில் கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்கவும், முடிவினை மேற்கொள்வதற்கும்;
9. எனது சுதந்திரத்திற்கு;
10. நான்சொல்வதை ஏனையோர் கேட்பதற்கும் புரிந்துகொள்வதற்கும்;
11. முதியோர் பராமரிப்புப் பேச்சாளர் அடங்கலாக, ஆதரவு அல்லது எனது சார்பாகப் பேசுவதற்கு நான் விரும்பிய ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு;
12. எதிர் நடவடிக்கை இல்லாத முறையீடு, மற்றும் எனது முறைப்பாடுகள் நியாயமாகவும், சரியாகவும் கையாளப்படுவதற்கு;
13. தனிப்பட்ட அந்தரங்கம் மற்றும் எனது சொந்தத் தகவல்கள் பாதுகாக்கப்படுவதற்கு;
14. என்னை நடாத்தும் முறையைப் பாதகமாகப் பாதிக்காமல் எனது உரிமைகளைப் பயன்படுத்துவதற்கு;

## நுகர்வோர்

நுகர்வோர் (அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நபரின்) கையொப்பம் (ஒப்பமிடுவதற்கு விரும்பினால்)

நுகர்வோரின் முழுப்பெயர்

அதிகாரமளிக்கப்பட்ட நபரின் முழுப்பெயர் (பொருத்தமானால்)

## வழங்குபவர்

வழங்குபவருடைய பணியாள் உறுப்பினரின் கையொப்பமும், முழுப்பெயரும்

வழங்குபவரின் பெயர்

/ /

இந்த அதிகாரப்பத்திரத்தின் ஒரு பிரதி நுகர்வோருக்குக் கொடுக்கப்பட்ட திகதி

/ /

இந்த அதிகாரப்பத்திரத்தில் கையொப்பமிடுவதற்கான வாய்ப்பினை நுகர்வோருக்கு (அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நபருக்கு) கொடுத்த திகதி

# முதியோர் பராமரிப்பு உரிமைகள் அதிகாரப்பத்திரம்

## நுகர்வோர்

முதியோர் பராமரிப்பு உரிமைகள் அதிகாரப்பத்திரத்தில் (அதிகாரப்பத்திரம்) கையொப்பமிடுவதற்கு நுகர்வோருக்கு விருப்பத்தேர்வு உண்டு. கையொப்பமிடுவதற்கு விரும்பாவிட்டாலும், பராமரிப்பு மற்றும் சேவைகளை நுகர்வோர் பெறலாம்.

இந்த அதிகாரப்பத்திரத்தில் கையொப்பமிடுவதென ஒரு நுகர்வோர் முடிவுசெய்தால், அவருடைய வழங்குபவர் இந்த அதிகாரப்பத்திரத்தின் பிரதி ஒன்றினைத் தனக்குக் கொடுத்ததையும் தான் புரிந்துகொள்ள வழங்குபவர் உதவியததையும் ஏற்றுக்கொள்வார்.

- *முதியோர் பராமரிப்பு சேவை தொடர்பாக நுகர்வோரின் உரிமைகள் பற்றிய தகவல்கள்; மற்றும்*
- *இந்த அதிகாரப்பத்திரத்தின் கீழ் நுகர்வோருக்கான உரிமைகள் பற்றிய தகவல்கள்.*

## வழங்குபவர்கள்

*முதியோர் பராமரிப்பு சட்டத்தின்கீழ், தமது உரிமைகளை நுகர்வோர் புரிந்துகொள்வதற்கும், அத்துடன் இந்த அதிகாரப்பத்திரத்தில் கையொப்பமிடுவதற்கு நியாயமான ஒரு வாய்ப்பினை ஒவ்வொரு நுகர்வோருக்கும் கொடுப்பதற்கும், அவர்களுக்கு உதவுமாறு வழங்குபவர்கள் கேட்கப்படுகிறார்கள். பின்வருவனவற்றைக் காட்டும் அதிகாரப்பத்திரத்தின் பிரதி ஒன்றினைக் கட்டாயமாக வழங்குபவர்கள் நுகர்வோருக்குக் கொடுக்கவேண்டும்.*

- *வழங்குபவருடைய பணியாள் உறுப்பினரின் கையொப்பம்;*
- *அதிகாரப்பத்திரத்தின் பிரதி ஒன்றினை வழங்குபவர் நுகர்வோருக்குக் கொடுத்த திகதி; மற்றும்*
- *இந்த அதிகாரப்பத்திரத்தில் நுகர்வோர் (அல்லது அவருடைய அதிகாரமளிக்கப்பட்ட நபர்) கையொப்பமிட வழங்குபவர் வாய்ப்பு அளித்த திகதி;*
- *இந்த நுகர்வோருடைய (அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நபருடைய) கையொப்பம்( அவர்கள் கையொப்பமிட விரும்பினால்); அத்துடன் நுகர்வோருடைய (பொருத்தமானால், அதிகாரமளிக்கப்பட்ட நபருடைய) முழுப்பெயர்*

*வழங்குபவர் ஆவணப்படுத்தலுக்காகக் கையொப்பமிடப்பட்ட ஒரு பிரதியைத் தன்னுடன் வைத்துக்கொள்ளவேண்டும்.*